மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி.
முன்னிலை : திரு.கே.ராஜேஷ்கண்ணன், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்துறைப்பூண்டி.
2020ம் வருடம் பிப்ரவரி மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2051, விகாரி வருடம் மாசி மாதம் 02ம் நாள்)

**அசல் வழக்குஎண்.01/2018**

1. கலைச்செல்வி
2.மனோகரன் ..... வாதிகள்

... எதிர் ....

1. இந்திராணி
2. விஜயபாபு
3.வட்டாட்சியர், திருத்துறைப்பூண்டி
4.மாவட்ட ஆட்சியர், திருவாரூர் ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 05.01.2018 அன்று இந்நீதிமன்ற கோப்பிலெடுக்கப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.எஸ்.செந்தில்குமார், அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வ.அரசு, அவர்கள் முன்னிலையாகியும், 3ம் மற்றும் 4ம் பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்களாக உள்ள நிலையில் இன்று (14.02.2020) இவ்வழக்கு குறுக்கு விசாரணைக்கு போடப்பட்டிருந்த நிலையில், வா.சா.1ஐ அழைத்து ஆஜரின்மையாலும், எடுத்துரைப்பும் இல்லாத நிலையிலும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.......

**தீர்ப்புரை**

வாதிகளின் அமைதியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ள தாவா சொத்தில் 1,2 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, அல்லது வேறு எவருமோ எவ்விதமான அத்துமீறல் அழிமானம், இடைஞ்சல், இடையூறு ஆக்கிரமிப்பு, குற்றமுறு பிரவேசம் போன்ற எவ்விதமான சட்டப்புறம்கான செயல்களில் ஈடுபடக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும் படிக்கும், 3ம் பிரதிவாதி கொருக்கை கிராம புல எண்.20/1D பொறுத்து 1ம் பிரதிவாதியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதை நீக்கரவு செய்து 1ம் வாதியின் பெயரை பதிவு செய்ய ஏதுவாக செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படிக்கும், இந்த வழக்கிற்கான செலவு தொகையினை வாதிகளுக்கு 1,2 பிரதிவாதிகள் கொடுக்க வேண்டுமென கேட்டும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இன்று (14.02.2020) இவ்வழக்கு வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டிருந்த நிலையில் வா.சா.1ஐ அழைத்து ஆஜரின்மையாலும், எடுத்துரைப்பும் இல்லாத நிலையிலும், தாவா வாதியின் தவறுகையால் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இன்று 2020ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14-ம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்துறைப்பூண்டி.